**மார்ச் – 18**

# TNPSC துளிகள்


- சென்னை வழக்கறிஞர் சங்கத்தின் 160வது ஆண்டு நிறைவு மற்றும் இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப் பட்டதன் 75வது ஆண்டு விழா நிறைவுக் கொண்டாட்டங்கள் ஆனது சென்னையில் நடைபெற்றன.
- தமிழ்நாட்டின் முன்னணி எழுத்தாளர்களில் ஒருவரான R. நாறும்பூ நாதன் (64) சமீபத்தில் காலமானார்.
- தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே உள்ள பட்டீஸ்வரத்தில் உள்ள 1,000 ஆண்டுகள் பழமையான சைவக் கோவிலில் ஒரு சிறிய பாதாள அறை கண்டறியப்பட்டுள்ளது.
- பெங்களூரு நீர் வழங்கீட்டு மற்றும் கழிவுநீர் வாரியம் (BWSSB) ஆனது, அதன் குழாய் வழி குடிநீர் விநியோக மேலாண்மை கட்டமைப்புக்காக என இந்தியத் தரநிலைகள் வாரியத்திலிருந்து (BIS) சான்றிதழைப் பெற்ற இந்தியாவின் முதல் குடிநீர் வாரியமாக மாறியுள்ளது.
- கூகுள் நிறுவனமானது, தொலைபேசிகள், மடிக் கணினிகள் மற்றும் இன்ன பிற சாதனங்களில் நேரடியாக இயங்குவதற்காக என்று வடிவமைக்கப்பட்டு உள்ள அதன் மிகவும் இலகுரக பொதுப் பயன்பாட்டுச் செயற்கை நுண்ணறிவு மாதிரிகளின் குழுமத்தில் ஜெம்மா 3 எனும் மாதிரியினைச் சமீபத்தில் சேர்த்து உள்ளது.
- கடந்த 42 நாட்களாகப் புதிய பாதிப்புகள் எதுவும் பதிவாகாமல் இருந்ததை அடுத்து, தான்சானியா நாட்டில் ஏற்பட்ட இரண்டாவது மார்பர்க் வைரஸ் (MVD) தொற்றானது முடிவுக்கு வந்ததாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.
- சமத்துவம், மனித உரிமைகள் மற்றும் கண்ணியத்தை நிலை நிறுத்தவும், மக்களின் மதம் சார் நம்பிக்கையைப் பொருட்படுத்தாமல் அனைவரையும் உள்ளடக்கிய வகையிலான சமூகங்களை உருவாக்க இஸ்லாமியத்திற்கு எதிரான மிகப் பெரும் வெறுப்பு உணர்வினை எதிர்ப்பதற்கான ஒரு சர்வதேச தினம் ஆண்டுதோறும் மார்ச் 15 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மின்னணுப் பொருட்கள் உற்பத்தி தொகுதிகள்

- தமிழ்நாட்டில் காஞ்சிபுரத்தில் உள்ள பிள்ளைப்பாக்கம் மற்றும் திருவள்ளூரில் உள்ள மணலூர் ஆகிய இடங்களில் 1,112 கோடி ரூபாய் செலவில் மேலும் இரண்டு மின்னணு உற்பத்தி தொகுதிகள் நிறுவப்பட உள்ளன.
- மின்னணுப் பொருட்கள் நாட்டின் இரண்டாவது மிகவும் பெரிய ஏற்றுமதிப் பொருளாக மாறியுள்ளன.
- இந்தியாவில் இருந்து மேற்கொள்ளப்படும் அனைத்து மின்னணு ஏற்றுமதிகளில் சுமார் 36% என்ற அளவானது, தமிழ்நாட்டிலிருந்து கிட்டத்தட்ட அனைத்துப் பொருட்களும் இந்த மண்டலத்தில் [ஸ்ரீபெரும்புதூர்] உற்பத்தி செய்யப்பட்டவையாகும்.
- மேலும், மின்னணு PLI (உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம்) திட்டத்தின் மிகப்பெரிய ஒரு

பயனாளி மாநிலமாக தமிழ்நாடு இருந்தது.




## பழங்குடியினர் வாழ்வாதாரக் கொள்கை





- ❖ தமிழ்நாடு அரசானது, பழங்குடியினர் வாழ்வாதாரக் கொள்கையினை உருவாக்கச் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது.
- ❖ பழங்குடியினர் சமூகங்களின் உறுப்பினர்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்களை மிக எளிதாக அணுகுவதை உறுதி செய்வதையும், பல்லுயிர்ப் பெருக்க வளங்காப்பில் அப் பிரிவினர் கொண்டுள்ள ஒரு பாரம்பரிய அறிவைப் பாதுகாப்பதையும், பயன்படுத்தச் செய்வதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் மலைப்பகுதிகளில் வசிக்கும் பெரும்

தனித்துவமான கலாச்சார அடையாளங்களைக் கொண்ட சுமார் 37 பழங்குடியினர் சமூகங்கள் உள்ளன.

- இந்தக் கொள்கையானது பகுதி சார்ந்த சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் கவனம் செலுத்தும்.
- இந்தத் திட்டத்தின் முதல் கட்டத்தில் சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஈரோடு மாவட்டத்தில் பர்கூர் மற்றும் கடம்பூர் மலைப் பகுதிகள் மற்றும் கள்ளக் குறிச்சி மாவட்டத்தில் கல்வராயன் மலைகள் ஆனது தேர்வு செய்யப்பட்டுள்ளன.

## 2024 ஆம் ஆண்டில் மாநிலத்தின் சதுப்புநிலப் பரப்பளவு





- தமிழ்நாட்டில் சதுப்புநிலக் காடுகளின் பரப்பளவு ஆனது கடந்த சில ஆண்டுகளில் சுமார் இரு மடங்காக அதிகரித்துள்ளது என்பதோடு இது 2021 ஆம் ஆண்டில் 4,500 ஹெக்டேராக இருந்த இது 2024 ஆம் ஆண்டில் 9,039 ஹெக்டேராக அதிகரித்துள்ளது.
- மொத்தப் பரப்பளவில் புதிய தோட்டங்களின் பங்கு 40.1% (3,625 ஹெக்டேர்) ஆகவும், தற்போதுள்ள சதுப்புநிலக் காடுகளின் பங்கு 59.9% (5,414 ஹெக்டேர்) ஆகவும் உள்ளன.
- 'தமிழ்நாட்டின் சதுப்புநிலக் காடுகளுக்கான கடல்சார் சூழலமைவுகளில் காணப்படும் கார்பன் கண்காணிப்பு' என்ற தலைப்பிலான அறிக்கையானது, திருவாரூர் மாவட்டம் ஆனது 2,142 ஹெக்டேர் பரப்பினை உள்ளடக்கிய மிகப்பெரிய சதுப்புநிலப் பரப்பைக் கொண்டுள்ளது என்று கூறுகிறது.
- தஞ்சாவூர் மாவட்டம் ஆனது மொத்தம் சுமார் 2,063 ஹெக்டேர்கள் பரப்புடன் அதனைத் தொடர்ந்து இடம் பெற்றுள்ளது என்பதோடு இதில் 854 ஹெக்டேர்கள் பரப்பிலான தோட்டங்களும் சுமார் 1,209 ஹெக்டேர்கள் பரப்பிலான இயற்கைச் சதுப்பு நிலங்களும் உள்ளன.
- இந்த இரண்டு மாவட்டங்களும் ஒருசேர, தமிழ்நாட்டின் மொத்த சதுப்புநிலக் காடுகள் மற்றும் தோட்டப் பரப்பில் சுமார் பாதியளவினைக் கொண்டுள்ளன.
- கடலூர், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய சில மாவட்டங்களில் உள்ள சதுப்புநிலப் பகுதிகளும் கணிசமான கார்பன் சேமிப்புத் திறனைக் கொண்டுள்ளன என்பதோடு இவற்றின் மொத்த கார்பன் இருப்பு முறையே ஹெக்டேருக்கு 249 டன், ஹெக்டேருக்கு 145 டன் மற்றும் ஹெக்டேருக்கு 77.5 டன் ஆகும்.
- விழுப்புரம் (ஹெக்டேருக்கு சுமார் 2.59 டன்) மற்றும் திருவள்ளூர் (ஹெக்டேருக்கு 13.1

டன்) ஆகியவை குறைந்த அளவு கார்பன் பிடிப்புத் திறனுடன் ஒரு குறைவான அடர்த்தி கொண்ட சதுப்புநிலப் பகுதிகள் ஆகும்.

# தேசியச் செய்திகள்

## 2019-24 ஆம் ஆண்டில் MPLADS நிதிகளில் சரிவு

- 17வது மக்களவையின் (2019 ஆம் ஆண்டு முதல் 2024 வரை) செயல்பாட்டுக் காலத்தில் மத்திய அரசினால் வெளியிடப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் உள்ளூர்ப் பகுதி மீதான மேம்பாட்டுத் திட்ட (MPLADS) நிதி சுமார் 4,510 கோடி ஆகும்.
- இது முந்தைய மக்களவையில் வெளியிடப்பட்ட ஒரு நிதியை விட 65.2 சதவீதம் குறைவு ஆகும்.
- 14வது மக்களவையின் மொத்தக் காலக் கட்டத்தில், மத்திய அரசானது அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 14,023 கோடி ரூபாயை வழங்கியது.
- 16வது மக்களவையின் காலக் கட்டத்தில் இந்த நிதியானது 12,945 கோடி ரூபாயாகக் குறைந்தது.
- 17வது மக்களவையில், கோவிட் பெருந்தொற்று காரணமாக இது மேலும் 4,510 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது.
- 17வது மக்களவையின் காலக் கட்டத்தில், உத்தரப் பிரதேசம் (சுமார் 798 கோடி ரூபாய்), மகாராஷ்டிரா (360 கோடி ரூபாய்) மற்றும் மேற்கு வங்காளம் (339 கோடி ரூபாய்) ஆகிய மாநிலங்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிக நிதியைப் பெற்றுள்ளனர்.
- ஆனால், டெல்லி (45 கோடி ரூபாய்), ஹரியானா (81 கோடி ரூபாய்) மற்றும் பஞ்சாப் (111 கோடி ரூபாய்) போன்ற சில மாநிலங்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்திய அரசிடமிருந்து மிகக் குறைந்த நிதியைப் பெற்றனர்.
- MPLADS நிதி என்பது ஓர் அரசுத் திட்டமாகும் என்ற ஒரு நிலைமையில் இதன் மூலம் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் ஆண்டுதோறும் 5 கோடி ரூபாய் நிதியினைப் பெறுவர்.
- 1993 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் ஆனது மத்திய அரசால் முழுமையாக நிதியளிக்கப்படுகிறது.





## வேளாண் தொழிலாளர் நலன் குறித்த பாராளுமன்றக் குழுவின் பரிந்துரைகள்

- மத்திய வருமான ஆதரவுத் திட்டத்தின் (PM-Kisan) கீழான சலுகைகள் ஆனது வேளாண் தொழிலாளர்களுக்கும் நன்கு விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று பாராளுமன்றக் குழு பரிந்துரைத்தது.

- நம் நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 55 சதவீதம் பேர் இந்த வேளாண் துறையில் ஈடுபட்டுள்ளனர் ஆனால் அவர்கள் அனைவரும் நில உரிமையாளர்களாக இல்லை.
- தற்போது, நில உரிமையாளர் வேளாண் குடும்பங்கள் மட்டுமே இந்தத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் தலா 6,000 ரூபாய் தொகையினைப் பெறுகின்றன என்பதோடு இது நான்கு மாதங்களுக்கு ஒருமுறையில் 2,000 ரூபாய் என்ற மூன்று சம தவணைகளில் செலுத்தப் படுகின்றது.
- நம் நாட்டில் சுமார் 14 கோடி நில உரிமையாளராக விவசாயிகள் உள்ளனர், ஆனால் அனைவரும் தங்கள் நிலத்தில் தாங்களாகவே பயிரிடுவதில்லை.
- 'பரளி' (நெல் எச்சங்கள்) சேகரிப்பதில் ஏற்படும் செலவினத்திற்கு ஒரு இழப்பீடாக இந்த விவசாயிகளுக்கு ஒரு குவிண்டால் நெல்லுக்கு சுமார் 100 ரூபாய் நிதி உதவி வழங்கவும் இந்தக் குழு பரிந்துரைத்துள்ளது.




## இந்தியாவில் மண் வளம் குறித்த வரைபடம்




- இந்திய மண் மற்றும் நிலப் பயன்பாட்டு கணக்கெடுப்பு (SLUSI) ஆனது, மண் வளத் தகவல் பதிவு அட்டை (SHC) தரவைப் பயன்படுத்தி புவி இடஞ்சார்ந்த நுட்பங்கள் மூலம் மாவட்டம்/கிராம வாரியான எண்ணிம மண் வளம் குறித்த சில வரைபடங்களை உருவாக்குகிறது.
- மண் வள வரைபடங்கள் ஆனது, மண்ணின் ஊட்டச்சத்துக் கலவை மற்றும் வளம்

பற்றிய விரிவான இடஞ்சார்ந்த தகவல்களை வழங்குகின்றன.

- இது விவசாயிகளுக்கு உரங்களைப் பயன்படுத்துவதற்கும் மண் சீரமைப்பினை மிக முறையாக மேற்கொள்வதற்கும் உதவுகிறது என்பதோடு இது உரத்தின் அதிகப் படியான பயன்பாடு அல்லது குறைவானப் பயன்பாட்டினால் ஏற்படும் அபாயத்தைக் குறைக்கிறது.
- தொலை உணர்திறன் மற்றும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கருவிகள் உள்ளிட்ட புவிசார் நுட்பங்கள் மண் வள வரைபட உருவாக்கத்தில் பயன்படுத்தப் படுகின்றன.
- இந்திய அரசாங்கத்தின் மண் நலம் மற்றும் வளம் என்ற திட்டத்தின் கீழ் மண் வள அட்டைகள் உருவாக்கப்படுகின்றன.

# சர்வதேசச் செய்திகள்

## ஆர்மேனியா-அஜர்பைஜான் அமைதி ஒப்பந்தம் 2025




- ஆர்மேனியா மற்றும் அஜர்பைஜான் நாட்டின் அதிகாரிகள், அவற்றிற்கு இடையேயான சுமார் 40 ஆண்டுகால மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு சமாதான ஒப்பந்தத்தின் உரைக்கு ஒப்புக்கொண்டுள்ளனர்.
- 1980 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில், நாகோர்னோ-கராபாக் என்ற அப்பகுதியானது ஆர்மேனியாவின் ஆதரவுடன் அஜர்பைஜானிலிருந்து பிரிந்தது.
- அஜர்பைஜானில் உள்ள இந்தப் பகுதியில், அந்த நேரத்தில் ஆர்மேனிய இன மக்கள் தொகை பெரும்பான்மையாக இருந்தது.
- இரு நாடுகளுக்கு இடையிலான சுமார் 1,000 கிலோ மீட்டர் (621 மைல்) பகிரப்பட்ட அந்த எல்லை மூடப்பட்டு பெரிய அளவில் இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது.


# பொருளாதாரச் செய்திகள்

## வட்டி வழங்கீட்டு முறை இல்லாத பத்திர முறை

- நிதி அமைச்சகம் ஆனது, பவர் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்காக, வட்டி வழங்கீட்டு முறை இல்லாத பத்திர முறையினை (ZCB) அறிவித்துள்ளது.
- இந்த நிறுவனம் ஆனது இதன் மூலம் 10,000 கோடி ரூபாய் வரை திரட்ட முடியும்.
- ZCB என்பது அது வெளியிடப்பட்ட காலத்தில் வட்டி வழங்காத, ஆனால் அதன் சந்தை

மதிப்பை விட தள்ளுபடியில் விற்கப்படுகின்ற ஒரு கடன் பெறல் கருவியாகும்.

- இந்தப் பத்திரத்தின் கால வரம்பு நிறைவடையும் போது, முதலீட்டாளர் அதன் ஒரு முழு சந்தை மதிப்பைப் பெறுவார்.
- இந்த முறையில் வழக்கமாக வட்டி செலுத்தப் படாது.
- இந்தப் பத்திரங்கள் ஆனது, 121 மாதங்கள் அல்லது 10 ஆண்டுகள் மற்றும் ஒரு மாதம் நிறைவு கால மதிப்பைக் கொண்டிருக்கும்.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## QS அமைப்பின் பாட வாரியான உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை 2025




- மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் (MIT) ஆனது, QS அமைப்பின் 2025 ஆம் ஆண்டு உலகப் பல்கலைக்கழக தரவரிசையில் தொடர்ந்து 13வது ஆண்டாக முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- இதில் லண்டன் இம்பீரியல் கல்லூரியானது இரண்டாவது இடத்தையும், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் ஹார்வர்ட் பல்கலைக்கழகம் முறையே மூன்றாவது மற்றும் நான்காவது இடத்தையும் பிடித்துள்ளன.
- கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் முதல் ஐந்து இடங்களில் ஒன்றாக இடம் பிடித்துள்ளது.
- பொறியியல் - பெட்ரோலியம் என்ற பிரிவில் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக்

கல்விக் கழகமானது உலகளவில் 31வது இடத்தில் உள்ளது.

- பொறியியல் - கனிம மற்றும் சுரங்கப் பிரிவில் தன்பாத்தின் இந்திய சுரங்கக் கல்லூரி உலகில் 20வது இடத்தைப் பிடித்துள்ளது.
- பொறியியல் - கனிம மற்றும் சுரங்கப் பிரிவில் மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது உலகளவில் 40வது இடத்தைப் பிடித்துள்ளது.
- பொறியியல் - கனிம மற்றும் சுரங்கப் பிரிவில் காரக்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது 45வது இடத்தைப் பிடித்துள்ளது.
- பொறியியல் - மின்சாரம் மற்றும் மின்னணு துறையில் டெல்லியின் இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் கழகமானது 47வது இடத்தைப் பிடித்துள்ளது.
- பொறியியல் - மின்சாரம் மற்றும் மின்னணு துறையில் மும்பையின் இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் கழகமானது உலகளவில் 50வது இடத்தில் உள்ளது.
- வணிகம் மற்றும் மேலாண்மைப் படிப்புகளில் உலகளவில் அகமதாபாத்தின் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனமானது 27வது இடத்தைப் பிடித்துள்ளது.
- வணிகம் மற்றும் மேலாண்மை படிப்புகளில் பெங்களூருவின் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனமானது 40வது இடத்தைப் பிடித்துள்ளது.
- ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகமானது மேம்பாட்டுப் பிரிவு படிப்புகளில் 29வது இடத்தைப் பிடித்துள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## மாற்றுத் திறனாளிகளுக்கான உலக கிராண்ட் பிரிக்ஸ் போட்டிகள் 2025




- புது டெல்லியில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான உலக கிராண்ட் பிரிக்ஸ் போட்டியானது இந்தியா நடத்திய முதலாவது சர்வதேச மாற்றுத் திறனாளிகளுக்கான போட்டியாகும்.
- இது 2028 ஆம் ஆண்டு வரையில் ஆண்டுதோறும் நடைபெறும் போட்டியாக நடைபெற உள்ளது.

- இந்திய அணியானது 45 தங்கம், 40 வெள்ளி மற்றும் 49 வெண்கலப் பதக்கங்களுடன் மொத்தம் 134 பதக்கங்களை வென்றதன் மூலம் பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் இருந்தது.


# முக்கிய தினங்கள்

## நதிகளுக்கான சர்வதேச நடவடிக்கை தினம் - மார்ச் 14

- இந்தத் தினமானது, மக்கள் ஒன்று கூடி, ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தி, நதிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க ஊக்குவிக்கிறது.
- இந்த சர்வதேச நதிகள் பாதுகாப்புத் தினம் ஆனது முதன்முதலில் 1997 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- பிரேசிலின் குரிடிபாவில் நடைபெற்ற ஒரு உலகளாவியக் கூட்டத்தின் போது இத்தினம் நிறுவப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Our Rivers, Our Future" என்பதாகும்.




## உலக நுகர்வோர் உரிமைகள் தினம் - மார்ச் 15




- 1962 ஆம் ஆண்டு இந்த நாளில் தான், அப்போதைய அமெரிக்க அதிபரான ஜான் F. கென்னடி நான்கு அடிப்படை நுகர்வோர் உரிமைகளை அறிமுகப்படுத்தினார்.
- இந்த நாள் ஆனது அனைத்து நுகர்வோரின் பல்வேறு அடிப்படை உரிமைகளையும் மேம்படுத்துவதையும், அந்த உரிமைகள் நன்கு மதிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுவதை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு,, ' A Just Transition to Sustainable Lifestyles' என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★